# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

*******

**முறையீட்டு மனு எண்: 297/2016/பே–2**

**ஆணை நாள். 01–08–2018**

**ஓமலூர் பேரூராட்சி பொதுமக்கள்,**
**ஓமலூர் பேரூராட்சி,**
**சேலம் மாவட்டம்.** -- **முறையீட்டு மனுதாரர்கள்**

**1.பேரூராட்சி மன்ற முன்னாள்**
**தலைவர்,**
**ஓமலூர் பேரூராட்சி.**
**2.செயல் அலுவலர்,**
**ஓமலூர் பேரூராட்சி,**
**சேலம் மாவட்டம்** -- **எதிர் மனுதாரர்கள்.**

ஆணை

சேலம் மாவட்டம், ஓமலூர் பொதுமக்கள் சார்பாக எனக் குறிப்பிட்டு வரப்பெற்ற நாளிடப்படாத புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.04.2016ல் பெறப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண். 297/2016 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவின் மீது அறிக்கை பெறப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

மேற்படி முறையீட்டு மனுவில் ஓமலூர் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் திரு.சிவக்குமார் என்பவர் குடியிருக்கும் பகுதியில் உள்ள அனைத்து மனைப்பிரிவுகளும் அனுமதி பெறாத மனைகள் எனவும், மேற்படி முன்னாள் பேரூராட்சித் தலைவர் குடியிருக்கும் மனையும் அனுமதி பெறாதது எனவும், முன்னாள் பேரூராட்சித் தலைவர் அப்பகுதியில் குடியிருக்கும் மனை உரிமையாளர்களிடம் தான் மனைக்கான அனுமதி பெற்று தருவதாக சொல்லி லட்சக்கணக்கில் பணத்தினை லஞ்சமாக பெற்றுள்ளதாக தெரிவித்தும் இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இம்முறைமன்ற நடுவ 15.04.2016ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்கண்ட புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 04.10.2017ம் நாளிட்ட கடிதத்தில் ஓமலூர் பேரூராட்சியில் திரு.சிவக்குமார் என்பவர் பேரூராட்சி மன்றத் தலைவராக 24.09.2014 முதல் 25.09.2016 வரை இருந்ததாகவும், இவர் தலைவராக இருந்த காலத்திற்கு முன்பே இவரது மனைவி திருமதி.சி.திலகவதி, க/பெ திரு.சிவக்குமார், காமராஜ் நகர், ஓமலூர் என்பவருக்கு சர்வே எண்.52/3 இடத்தில் 1,575 சதுர அடி இடத்தில் தார்சு கட்டிடம் 1,333 சதுர அடி இடத்தில் (தரை தளம் மற்றும் முதல் தளம்) கட்ட ஓமலூர் பேரூராட்சி கோப்பு எண்.255/2014/அ.2/நாள்.27.05.2014ல் அப்போதைய செயல் அலுவலர் திரு.கோவிந்தராஜு என்பவரால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு வரி விதிப்பு எண்.6699, 6700, மற்றும் 6725 ன்படி ரூ.646/–, ரூ.646/– மற்றும் ரூ.202/–க்கான வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்கண்ட சர்வே எண் கொண்டுள்ள இடத்தில் கடந்த காலங்களில் வரி விதிப்புகள் செய்யப்பட்டுள்ளது என்றும் இந்த இடத்திற்கான மனைப்பிரிவு அங்கீகார ஆவணங்கள் ஏதும் பேரூராட்சி அலுவலகத்தில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்ட மேற்படி சர்வே எண்ணிற்கான மனைப்பிரிவு அங்கீகாரம் பேரூராட்சி அலுவலகத்தில் இல்லை என தெரிவித்துள்ளது ஏற்புடையதல்ல. எனவே மேற்படி சர்வே எண்ணிற்கான மனைப்பிரிவு அங்கீகாரம் குறித்த ஆவணங்களை சேலம் மண்டல உள்ளூர் குழும அலுவலகம் மூலம் பெற்று மனைப்பிரிவு அங்கீகாரம் பெற்றதுதானா என உறுதி செய்து, உரிய சட்டப்படியான நடவடிக்கை மேற்கொள்ள ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

மேலும் அங்கீகாரம் பெறப்படாமல் விதிகளுக்கு புறம்பாக கட்டிட அனுமதி மற்றும் வரி விதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மீது துறை ரீதியான நடவடிக்கைகள் மேற்கொண்டிட பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களை கேட்டுக் கொண்டு அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 01 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 27/8/2018

பெறுநர்:

1.செயல் அலுவலர்,
ஓமலூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம்.

2.திரு சிவக்குமார்,
பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர்,
ஓமலூர் பேரூராட்சி .(ஓமலூர் பேரூராட்சி செயல் அலுவலர் மூலமாக)

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை–108.

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
சேலம் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சேலம்.